ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1760/4 - 2012 මැයි 28 වැනි සඳුදා - 2012.05.28

*1760/4 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம்**

*2012 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

நீதிபதி ஹெக்டர் எஸ். யாப்பா,
தவிசாளர்,
வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு.

கொழும்பு,
06 மார்ச்சு, 2012.

விதிகள்

1. இவ்விதிகள் 2012 ஆம் ஆண்டின் வரி மேன்முறையீட்டு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**மேன்முறையீட்டு நடவடிக்கைமுறை**

2 (அ) இச்சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்குச் செய்யப்படும் மேன்முறையீடானது, ஒரு மனுப் படிவத்தில் செய்தல் வேண்டும்.

(ஆ) செய்யப்படும் மேன்முறையீட்டு மனு பின்வரும் விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) மேன்முறையீட்டாளரின் பெயரும் முகவரியும் ;

(ii) வரிக்கோப்பிலக்கம்/வரி செலுத்துநரின் அளடையாள இலக்கம் ;

(iii) ஆணையாளர் நாயகரின் தீர்மான இலக்கம் ;

(iv) சம்பந்தப்பட்ட வரியின் தன்மை அல்லது வகை ;

(v) வரிமதிப்பீட்டிலக்கம்/விதிப்பனவு இலக்கம் ;

(vi) ஆணையாளர் நாயகரினால் தீர்மானிக்கப்பட்ட, மொத்த வரி/விதிப்பனவு மற்றும் விதிக்கப்பட்ட தண்டம் ;

(vii) செய்யப்படும் மேன்முறையீடானது எந்த அடிப்படையில் மீது அல்லது காரணங்களால் மீது செய்யப்படுகின்றதோ அந்த அடிப்படை காரணங்கள் பற்றிய சுருக்கமான கூற்று ; முறையாக இலக்கமிடப்பட்ட பந்திகளில் எடுத்துக்கூறப்படுதல் வேண்டும் ;

(viii) கோரப்படும் நிவாரணம் ; மற்றும்

(ix) அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனுமிருப்பின் அவரின் பெயரும் முகவரியும்.

3. மேன்முறையீட்டாளர், மனுவுடன் சேர்த்து, சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் தேவைப்பட்டவாறு, வரிமதிப்பிடப்பட்ட பணத்தொகையின் இருபத்தைந்து சதவீதத்துக்குச் சமமாகவுள்ள பணத்தொகையினை செலுத்துவதற்கான ஆவணமூல எண்பிப்பைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. திருப்பிக்கொடுபடாத கட்டணமாக ரூபா இரண்டாயிரத்து ஐநூறை கொழும்பு கோட்டையிலுள்ள இலங்கை வங்கியின் தப்ரொபேன் கிளையில் 7040110 ஆம் இலக்கத்தையுடைய ஆணைக்குழுவின் கணக்கில் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், வங்கியினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டை மனுவுடன் இணைக்கப்படுதலும் வேண்டும்.

5. மேன்முறையீட்டாளர், மனுவினதும் அதனோடிணைக்கப்பட்ட எல்லா ஆவணங்களினதும் ஆறு (06) பிரதிகளை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. மனுவுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படும் எல்லா ஆவணங்களும், அசல் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளாக இருத்தல் வேண்டும்.

**மேன்முறையீடுகளை விசாரித்தலும் தீர்மானித்தலும்**

7. மேன்முறையீட்டாளரினால் செய்யப்படும் மேன்முறையீட்டினை விசாரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம்பற்றி அம் மேன்முறையீட்டாளருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

8. (1) ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படும் மேன்முறையீட்டினை எந்த சாட்சியின் சான்று தேவைப்படுகின்றதோ அந்த சாட்சிக்கு, ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப்படவேண்டியவாறான திகதி, நேரம், இடம் ஆகியவற்றை அறிவித்தல்மூலம் அழைப்பாணை விடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் விசாரணையில் சான்றளிப்பதற்கு ஆணைக்குழுவினால் அழைப்பாணை விடுக்கப்படும் சாட்சியொருவரிடமிருந்து தேவையான விடயங்கள் பற்றி அத்தகைய நபருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நபர் தேவையான விடயங்களுடன் விசாரணைக்கு சமூகமளித்தல் அவரின் கடமையுமாகும்.

9. (1) ஆணைக்குழுவானது, நிர்ணயிக்கப்பட்ட திகதியில் மேன்முறையீட்டொன்றின் விசாரணையை முடிவுற இயலாதிருக்குமிடத்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு வசதியான வேறு ஒரு திகதிக்கு விசாரணையை ஒத்திவைக்கலாம்.

(2) விடயத்துக்கேற்ப, மேன் முறையீட்டாளர் ஒருவர் நிர்ணயிக்கப்பட்ட திகதியன்றோ அல்லது ஒத்திவைக்கப்பட்ட திகதியன்றோ தவிர்க்கமுடியாத சூழ்நிலை காரணமாக விசாரணைக்கு வருகைதர இயலாதவிடத்து, அத்தகைய மேன்முறையீட்டாளர் தாமாகவோ அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிமூலமாகவோ அத்தகைய இயலாமைபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், ஆணைக்குழுவானது, அம்மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு புதியதொரு திகதியையும் நேரத்தையும் வழங்கலாம்.

10. விசாரணைக்கு நிரற்படுத்தப்பட்ட மேன்முறையீட்டினை ஏதேனும் காரணத்துக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட முடியாதிருப்பின், மேன்முறையீடு மீள நிரற்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், விசாரணைக்காக நிர்ணயிக்கப்பட்ட புதிய திகதியும் நேரமும் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

11. (1) மேன்முறையீட்டாளர் ஒருவரின் மேன்முறையீட்டை விசாரிப்பதற்கான திகதியும் நேரமும் அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு அந்த மேன்முறையீட்டாளர், தனது இயலாமைபற்றி ஆணைக்குழுவுக்கு அறிவிக்காமல் விசாரணைக்கு வருகை தவறுமிடத்து மேன்முறையீட்டினை தள்ளுபடி செய்தலாகும்.

(2) பந்தி (1) இ ஏற்பாடுகள் எவ்வாறாயிருப்பினும், ஆணைக்குழுவானது, மேன்முறையீட்டாளர் தனது வருகைதராமைக்கான காரணங்கள் பற்றித் திருப்திகரமான முறையில் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுவதன்மேல், தள்ளுபடி செய்யப்பட்ட ஒரு வழக்கை விசாரணைக்கு மீளநிரற்படுத்துவதற்கு அனுமதியளிக்களாம்.

12. (1) ஒரு மேன்முறையீட்டின் விசாரணையின்போது, மேன்முறையீட்டாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, மேன்முறையீட்டுக்கான ஏதுக்களை விளக்கி சுருக்கமாக வாய்மொழிமூல சமர்ப்பணத்தைச் செய்யலாம்.

(2) ஆணைக்குழுவானது, அவசியமானவிடத்து, சம்பந்தப்பட்டவர்களை எழுத்திலான சமர்ப்பணங்களைச் சமர்ப்பிக்கும்படி வேண்டுகோள் விடுக்கலாம்.

13. ஆணைக்குழுவின் முடிவுபற்றி ஆணையாளர் நாயகருக்கும் மேன்முறையீட்டாளருக்கும் ஆணைக்குழுவினால் எழுத்து மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அம் முடிவின் பிரதியொன்றுக்கு அவர்கள் உரித்துடையவராவர்.

14. ஆணைக்குழுவின் செயலாளர் மேன்முறையீடுகளின் விசாரணை தொடர்பான நாட்குறிப்பேடுகளைப் பேணுதல் வேண்டும்.

15. இவ்விதிகளின் நோக்கத்துக்காக :-

"சட்டம்" என்பது, 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டம் எனப் பொருள்படும் ;

"ஆணைக்குழு" என்பது, 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு என்று பொருள்படும் ; அத்துடன்

"ஆணையாளர் நாயகர்' என்பது, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் எனப் பொருள்படும்.

6- 486

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.